1975 அக்டோபர் 28]

Son-et-Lumiere show in Tamil Nadu.

* 32 Q.—THIRU G. SWAMINATHAN (on behalf of THIRU D. SANTOSHAM): Will the Hon. the Minister for Education be pleased to state:

(a) whether the location of the Son-et-Lumiere show in Tamil Nadu has been finalised; and

(b) if not, whether the Pudu Mandapam opposite to Arulmigu Meenakshi Amman Temple in Madurai will be considered for the purpose ?

தமிழ்நாட்டில் 'ஒலி-ஒளிக் காட்சி'

திரு. ஜி. சுவாமிநாதன் (திரு. டி. சந்தோஷம் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) தமிழ்நாட்டில் 'ஒலி-ஒளிக் காட்சி' அமைக்கப்பட வேண்டிய இடம் குறித்து இறுதி முடிவெடுக்கப்பட்டுள்ளதா ?

(இ) இல்லையெனில், இவ்வகையில், மதுரையிலுள்ள அருள்மிகு மீனாட்சி அம்மன் கோயிலுக்கு எதிரிலுள்ள புது மண்டபத்தைத் தெரிந்தெடுப்பது பற்றி பரிசீலிக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.

(இ) நிதிவசதிகள் கிடைப்பதைப்பொறுத்து தொழில் நுட்பக் காரணங் களை முன்னிட்டு, புதுமண்டபம் ஏற்றதெனக் கருதப்பட்டால் அது ஆய்வு செய்யப்படும்.

திரு. எல். பலராமன்: இந்த ஒலி-ஒளிக் காட்சி என்பதுபற்றி எனக்கு ஒன்றும் புரியவில்லை. அதைப்பற்றி விளக்க வேண்டுமென்று அமைச்சர் அவர் களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அதை 'சவுண்ட் அன்டு லைட்' என்று சொல்வார்கள். இது, எல்லோரும் பார்க்கத்தக்க அளவுக்கு டெல்லி செங்கோட்டையிலே இருந்து வருகின்றது. அங்கு ஒலியைக் காண லாம். கட்டங்கள் போலத் தெரியும். அந்த கட்டங்களிலே சிவப்பு, பச்சை என்று ஒளியைக் காட்டி வருகிறார்கள். மற்றபடி கதையின் நிகழ்ச்சிகளைக் காதாலேதான் கேட்க முடியும் டெல்லி செங்கோட்டையிலே நாம்

எல்லோரும் பார்க்கத்தக்க அளவுக்குச் செய்திருக்கிறார்கள். நாமும் அந்த மாதிரி அமைக்கலாமென்று முயற்சி எடுத்து வருகிறோம். ஆனால் அது முற்றுப் பெறவில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : இது சம்பந்தமாக மத்திய அரசு அதற்கு நிதி ஒதுக்கியிருப்பதாக மத்திய அமைச்சர் ஒருவர் சொல்லியிருக்கிறார். முழுவதையும் மாநில அரசே செலவு செய்து செய்ய வேண்டுமா அல்லது மத்திய அரசு அதற்குரிய பணத்தைக் கொடுக்குமா என்பது தெரியவில்லை. மகாபலிபுரத்தில் அமைக்கலாமென்று இந்த அவையிலேகூட பல முறை பேசியிருக்கிறோம். இதுபற்றி முடிவுக்கு வராமல் கால தாமதம் ஏற்படுவதற்குக் காரணம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதற்கென்று இதுவரை நிதி ஒதுக்கீடு எதுவும் செய்யவில்லை. மத்திய சுற்றுலாத் துறை சார்பில் சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதற்கும், பயணிகள் பொழுது போக்குவதற்குப் பயன்படுகின்ற முறையில் அமைய வேண்டுமென்பதற்காகத்தான் மதுரை மீனாட்சியம்மன் கோவிலிலே அதை வைக்கலாமென்று வல்லுநர்கள் யோசனை சொன்னார்கள். அதை அமைப்பதாக இருந்தால், எவ்வளவு செலவாகுமென்று மதிப்பீடு கேட்டபோது, ரூபாய் 18 லட்சம் வரையில் செலவாகுமென்று, 5 அல்லது 6 ஆண்டுகளுக்கு முன்னால் சொன்னார்கள். அதை அங்கு வைக்கலாம் என்று குறிப்பு பத்திரிகையில் வந்தபோது, கோயிலிலே வைக்கக்கூடாது, கோவிலின் தன்மை கெட்டுவிடும் என்றெல்லாம் எதிர்ப்புத் தெரிவித்தார்கள். அதை மத்திய அரசும் கைவிட்டு, மகாபலிபுரத்திலே வைக்கலாமென்ற யோசனையை மத்திய சுற்றுலாத் துறை அமைச்சர் டாக்டர் கரண்சிங் அவர்கள் கூறினார்கள். மகாபலிபுரம் ஏற்றதாக அமையுமா என்று ஆராய்ந்தார்கள். அந்த இடம் ஏற்றதாக அமையவில்லை. அங்கு சிற்பங்கள் எல்லாம் ஊருக்குள்ளேயே அமைந்திருப்பதால், இதை வைப்பதற்கு அந்த இடம் தகுந்த இடம் இல்லை, நாம் செய்ய முடியாது என்ற நிலை ஏற்பட்டது. 'சவுண்ட் அண்டு லைட்' வைப்பதற்குப் பரந்த இடம் வேண்டுமென்ற கருத்தைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அங்கு கடற்கரைக் கோவிலை மட்டும் வைத்துக் கொண்டு நாம் செய்ய முடியாது. மாமல்லபுரம், மதுரை மீனாட்சியம்மன் கோவில் என்று திருப்பித் திருப்பிச் சொல்லிக்கொண்டிருந்தார்கள். அண்மையில் மத்திய சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. ராஜ் பகதூர் அவர்கள், மகாபலிபுரம் ஏற்றதாக இல்லை, மீனாட்சியம்மன் கோயிலிலே வைப்பதற்கு இடம் கொடுப்பதாகவும் இல்லை, மகாபலிபுரத்தில் இந்த ஒலி-ஒளிக் காட்சி அமைப்பதற்குப் பதிலாக வண்ணத் திரைப்படம் ஒன்றைத் தயாரித்து அதன்மூலம்

1975 அக்டோபர் 28]

பல்லவன் ஆட்சித் திறன், கலைத் திறன் ஆகியவற்றையெல்லாம் எடுத்துக் காட்டலாம் என்ற அளவில் மத்திய சுற்றுலாத் துறை செய்யும் என்றும், அல்லது மதுரையிலே திருமலை நாயக்கன் மகாலில் அல்லது புது மண்டபத்தில் வைப்பதற்கு ஏற்றதாக இருக்குமானால் அதைப்பற்றிப் பரிசீலிக்கலாமென்றும் சொன்னார்கள். புதுமண்டபம் இதற்குப் பொருந்திவராது என்று கருதப்படு கிறது. வரலாற்றுத் தொடர்பு உள்ள இடத்தில் செய்தால் நன்றாக இருக்கு மென்று சொல்கிறார்கள். புதுமண்டபம் இடவசதி காரணமாகப் பொருந்தாது என்று விடப்பட்டது. திருமலை நாயக்கன் மகாலில் பொருந்தி வருமா என்று ஆராயும்படி தமிழ்நாடு சுற்றுலாத் துறையைக் கேட்டிருக்கின்றார்கள். நமக்கு அதிலே ஒரு (Background) கிடைத்திருக்கிறது. அதைப்பற்றி குறிப்பு வந்த பிறகு, மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்படுமென்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

[பிற்பகல் 4-10]

திரு. ஜி. சுவாமிநாதன் : 'ஒலி-ஒளிக் காட்சி' ஒன்றை தமிழகத்தில் அமைக்க வேண்டுமென்ற ஒரு கருத்து மத்திய அரசிடத்தில் இருக்கிறதாகத் தெரிகிறது. தாஜ்மகாலில் 'ஒலி-ஒளிக் காட்சி' அமைக்க வேண்டுமென்ற கருத்தை மத்திய அரசு பரிசீலித்து முடிவும் எடுத்ததாகத் தெரிகிறது. மத்திய அரசு நிதி கொடுக்கவும், 'ஒலி-ஒளிக் காட்சி' அமைக்க வேண்டுமென்ற கருத்தை ஏற்றுக் கொள்ளவும் தயாராக இருக்கிறார்கள். தகுந்த இடம் தேர்ந்தெடுக்கப்பட வேண்டியதுதான் பாக்கி. மகாபலிபுரத்தில் வைக்கப்பட வேண்டுமா அல்லது மதுரையிலுள்ள அருள்மிகு மீனாட்சி அம்மன் கோயிலுக்கு எதிரிலுள்ள புது மண்டபத்தில் வைக்கப்பட வேண்டுமா என்பதல்ல பிரச்சினை. பூம்புகார், சுற்றுலாப் பயணிகளைக் கவரும் விதத்தில் வளர்ந்து வருகிற காரணத்தால், மத்திய அரசை வற்புறுத்தி, மத்திய அரசின் நிதி உதவியை விரைவிலே பெற்று, அங்கு 'ஒலி-ஒளிக் காட்சி' அமைக்கும் கருத்தை அரசு ஆராயுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மத்திய அரசு இன்னும் பண ஒதுக்கீடு செய்யவில்லை. இடத்தைத் தேர்ந்தெடுத்து நாம் மத்திய அரசை வற்புறுத்தினால், ஒரு வேளை கொடுக்க முன்வருவார்கள். இடம் தேர்ந்தெடுக்கப்பட வேண்டியதுதான் முக்கியம். ஓர் இடத்தைத் தேர்ந் தெடுத்துச் சொன்னால், அதற்கு வரலாற்றுப் பின்னணி இருக்கிறதா என்று மத்திய அரசு கேட்கக்கூடும். மகாபலிபுரம் என்று சொன்னவுடன் அதனுடைய வரலாற்றுப் பின்னணியை இணைத்துச் சொல்வார்கள். டில்லி செங்கோட்டை யில்கூட ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு, ஷாஜகான் காலத்திற்குப் பிறகு

பகதூர்ஷா போன்றவர்கள் ஆட்சி செய்ததாக வரலாற்றுப் பின்னணி இருப்பதாக எடுத்துச் சொல்கிறார்கள். பழம்பெரும் கோட்டையான தஞ்சாவூர் அரண்மனையை அந்த அளவுக்கு ஏற்று, அங்கு 'ஒலி-ஒளிக் காட்சி' அமைக்கலாமா என்று யோசிக்கலாம். திருமலைநாயக்கர் மகால் சரியாக இல்லாவிட்டால், தஞ்சையில் அமைப்பதுபற்றி யோசிக்கலாம்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: ஏற்கெனவே மக்கள் அதிகமாகக் கூடுகிற வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்களுக்குக் கொண்டுபோய் 'ஒலி-ஒளி காட்சியை' அமைப்பதை விட, வரலாற்றுச் சிறப்புமிக்க இடமாகவும் அதே சமயத்தில் பின் தங்கிய இடமாகவும் உள்ள கங்கைகொண்ட சோழபுரத்துக்கு இதைக் கொண்டுவருவது பற்றி அரசு ஆராயுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: வரலாற்றுச் சிறப்புமிக்க, ஆனால் அதே நேரத்தில் மக்கள் வந்து கூடுகிற இடமாகப் பார்த்து அமைப்பது தான் பொருத்தம். ஏனென்றால் நாம் 'ஒளி-ஒலிக் காட்சியை' அமைப்பதற்கு சில ஆண்டுகளுக்கு முன்பு 18 லட்சம் ரூபாய் செலவாகும் என்றார்கள். இப்போது 35 லட்சம் ரூபாய் இல்லாமல் அதை அமைக்க இயலாது. மக்கள் அதிகமாகக் கூடாத இடத்தில் அமைத்தால், நாம் செலவிடும் பணத்துக்குரிய வட்டியைக்கூட அங்கிருந்து கிடைக்கும் கட்டணத்தில் நாம் ஈடு செய்ய முடியாது. மக்களும் சுற்றுப்பயணிகளும் அதிகமாக வந்து போகும் இடமாக இருக்க வேண்டும். சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த செங்கோட்டையில் அதை அமைத்திருக்கிறார்கள். தாஜ்மஹாலில் அமைத்திருக்கிறார்கள். ஆக, குறிப்பிட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களில்தான் அமைத்திருக்கிறார்கள்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: 'ஒலி-ஒளிக் காட்சி' என்பதற்கு விளக்கம் தேவை.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: நான் முன்பே இதற்கான விளக்கத்தைக் குறிப்பிட்டேன். சென்னையில் அண்மையில் சுற்றுலாத்துறை நடத்திய கண்காட்சியில் செயற்கையாக சிலபல வரைபடங்களை வரைந்து வைத்து, சிலப்பதிகாரத்திலுள்ள ஒருசில பகுதிகளை 'ஒளி-ஒலிக் காட்சி'யில் பொதுமக்கள் பார்ப்பதற்காகக் காட்டினோம். சிகப்பு லைட் காட்டுவார்கள். லைட்தான் நமக்குத் தெரியும். சவுண்ட் மட்டும் கேட்கும். கற்பனை நிகழ்ச்சியாகத் தெரியும். 'ஒளி-ஒளிக் காட்சி'யில் உருவங்கள் தெரியாது.

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: 10 ஆண்டுகளுக்கு முன்பு பூம்புகார் அவ்வளவு சிறப்பு இல்லாத இடமாக இருந்தது. இப்பொழுது மக்கள் கூடுகிற

1975 அக்டோபர் 28]

இடமாகக் காட்சியளிக்கிறது. கரிகால் வளவனுக்குச் செய்ததை கங்கை கொண்ட சோழனுக்குச் செய்ய முடியும். கங்கை கொண்ட சோழனின் புகழ் வாய்ந்த இடத்திலே அரசு 'ஒலி-ஒளிக் காட்சி'யை அமைக்க வேண்டு மென்பது என்னுடைய வேண்டுகோள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : கங்கை கொண்ட சோழ புரத்திலுள்ள கோயிலை நிர்வகிக்கும் பொறுப்பு நம்முடையதல்ல. இப்போது நாம் அங்குள்ள கோயிலைப் புதுப்பிக்க வேண்டிய நிலைமையில் இருக்கிறோம். தஞ்சைக் கோயிலைப் புதுப்பிக்கும் பணி கூட இன்னும் முடிவடையவில்லை. கங்கை கொண்ட சோழபுரம் கோயில் கலன் அடையாமல், விழ்ந்து விடாமல் இருக்கத்தான் நாம் மைய அரசிடம் எங்களிடம் அதன் நிர்வாகத்தைத் திருப்பிக் கொடுங்கள் என்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். அவர்களின் நிர்வாகத்தின் கீழ்தான் இப்பொழுது அந்தக் கோயிலை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். கங்கை கொண்ட சோழபுரக் கோயில் தஞ்சைக் கோயிலை விட மிகவும் பழமை வாய்ந்ததாக இருக்கிறது.

Earned Leave for Teachers of Aided High Schools.

*33 *Q.*—THIRU K. S. GANAPATHI : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that the teaching staff of the Aided High Schools are granted earned leave benefits with effect from 1st April 1968; and

(*b*) if so, the reason for not extending the same benefits to the non-teaching staff of the Aided High Schools also, from that date ?

அரசு மானிய உதவி பெறும் உயர்நிலைப் பள்ளிகளின்
ஆசிரியர்களுக்கு ஈட்டிய விடுப்பு

திரு. கே. எஸ். கணபதி : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசு மானிய உதவி பெறும் உயர்நிலைப் பள்ளிகளைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு 1—4—1968 ஆம் நாளிலிருந்து ஈட்டிய விடுப்பு நன்மைகள் வழங்கப்பட்டுள்ளது உண்மையா ?